இனிமையான குழந்தைகளே! ஞானம் அக்னி என்று சொல்லப் படுவதில்லை. யோகம் என்பது அக்னியாகும். யோகத்தில் இருப்பதன் மூலம் உங்களுடைய பாவங்கள் பஸ்பமாகின்றன. நீங்கள் தூய்மையாக, வெள்ளையாக ஆகிவிடுவீர்கள்.

கேள்வி: எந்தக் குழந்தைகளின் புத்தியாகிய அம்பறாத்துணியில் (அம்பு வைக்கும் கூடு) ஞான பாணங்கள் நிரம்பியிருக்கும்?

பதில்: யார் தினந்தோறும் படிப்பை நன்கு படிக்கின்றார்களோ, மற்றும் கற்றுத் தருகின்றார்களோ அவர் களுடைய புத்தியாகிய அம்பறாத்துணி ஞான பாணங்களால் நிரப்பப் பட்டிருக்கும். அவர்கள் தான் தாய்-தந்தையருக்குச் சமமாக முட்களை மொட்டுகளாகவும், மொட்டுகளை மலர்களாகவும் உருவாக்குகின்ற சேவை செய்ய முடியும். யார் நல்லபடி கற்றுக் கொண்டு மற்றவர்களுக்குக் கற்பிக் கின்றார்களோ அவர்கள் தான் உயர்ந்த பதவி அடைகின்றார்கள்.

பாடல்: என் மனமென்ற வாசலில் வந்தவர் யார்?...

குழந்தைகளுக்கு ஓம் சாந்தி என்பதன் அர்த்தம் புரிய வைக்கப்பட்டுள்ளது. ஓம் என்றால் அகம் ஆத்மா. அகம் ஆத்மா சொல்கின்றது, எனது சுயதர்மம் சாந்தி, நான் சாந்தி தேசத்தில் வசிப்பவன். இங்கே இந்த உடல் உறுப்புகள் கிடைக்கின்றன என்றால் டாக்கி (பேசக்கூடியதாக) ஆகிவிடுகின்றது. இந்த சரீரத்தின் ஆதாரத்தை எடுத்து ஆத்மாவாகிய நாம் கர்மம் செய்கின்றோம். கர்மத்தையோ கர்மேந்திரியங்கள் மூலமாகத் தான் செய்வார்கள் அல்லவா? ஆத்மா கேட்கின்றது, இவர் யார், எங்கிருந்து வந்திருக்கிறார்? அவரை நாம் நினைவு செய்கின்றோம், பிறகு அடிக்கடி மறந்து விடுகின்றோம். ஏனெனில் இந்தத் தந்தையின் நினைவில் ஒருபோதும் அமர்ந்ததில்லை. மற்ற சத்சங்கங்களிலோ நம் முன்னால் சந்நியாசிகள், வித்வான்கள் முதலானோர் அமர்ந்துள்ளனர். அவர்கள் வேதம், உபநிஷதம், இராமாயணம் முதலியவற்றைச் சொல்கின்றனர். ஆத்மாவின் புத்தியில் சாஸ்திரங்களே நினைவில் இருக்கின்றன. குருவைப் பார்க்கின்றனர். இங்கோ நீங்கள் அறிவீர்கள் -- பரமபிதா பரமாத்மா வருகின்றார். அவரும் கூட ஆத்மா தான், ஆனால் அவர் சுப்ரிம் ஆத்மா. அவர் வந்து இவருக்குள் பிரவேசமாகின்றார். நீங்கள் அறிவீர்கள், பரமபிதா பரமாத்மா இவருக்குள் அமர்ந்து நமக்கு சகஜ இராஜயோகம் கற்பிக்கின்றார். உங்களுடைய புத்தி சாஸ்திரங் களின் பக்கம் அல்லது தேகத்தின் பக்கம் செல்வதில்லை. நீங்கள் உங்களை ஆத்மா என நிச்சயம் செய்ய வேண்டும். ஆத்மா தான் முதலில். ஆத்மாவின் ஆதாரத்தில் தான் சரீரம் செயல்படுகின்றது. ஆத்மா அழியாதது. ஆத்மாக்கள் நாம் எல்லையற்ற தந்தையிடமிருந்து ஆஸ்தியைப் பெறுகின்றோம். பாபா தம்முடைய மற்றும் மனித சிருஷ்டியின் முதல்-இடை-கடை பற்றிய அறிமுகத்தைத் தருகின்றார். அவர் தான் ஞானக் கடல் எனப்படுகின்றார். ஈஸ்வரன் மற்றும் அவருடைய படைப்பு பற்றிய ஞானம் யாரிடமும் இல்லை. ரிஷி-முனி முதலானோர் அனைவரும் முடிவற்றவர், முடிவற்றவர் எனச் சொல்லி வந்திருக்கின்றனர். படைப்பவர் மற்றும் அவரது படைப்புக்கு முடிவில்லை, எங்களுக்குத் தெரியாது என்கிறார்கள். தந்தை மகனை வெளிக் காட்டுவார் என்று சொல்லப்படுகின்றது. தந்தை தம்முடைய அறிமுகத்தைத்

தமது குழந்தைகளுக்குத் தருவார். குழந்தைகள் தந்தையின் அறிமுகத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள். மனிதர்களோ அந்தத் தந்தையை அறியாத காரணத்தால் சர்வவியாபி எனச் சொல்லி விடுகின்றனர். இப்போது குழந்தைகளாகிய உங்களது புத்தியில் பாபாவின் நினைவு வந்திருக்கிறது. உங்களுக்குள் பாபா பிரவேசமாகி யிருக்கிறார் என்பதில்லை. பாபாவின் அறிமுகம் கிடைத்துள்ளது. இப்போது பாபா சொல்கிறார், என்னை நினைவு செய்யுங்கள். நான் சர்வவியாபி என்று சொல்லவில்லை. என்னை நினைவு செய்வீர்களானால் யோக அக்னி மூலம் உங்களுடைய விகர்மங்கள் வினாசமாகின்றன. பாபாவோ சர்வ சக்திவான் இல்லையா? அவரை நினைவு செய்வதன் மூலம் விகர்மங்கள் வினாசமாகின்றன. ஞானத்தை அக்னி எனச் சொல்ல மாட்டார்கள். யோகம் தான் அக்னி எனச் சொல்லப்படுகின்றது. அதன் மூலம் பாவங்கள் பஸ்பமாகின்றன. வேறு யாருடைய நினைவினாலும் பாவங்கள் பஸ்பமாவதில்லை.

இந்த விளையாட்டுகள் அனைத்தும் பாரதத்தில் உருவாக்கப் பட்டுள்ளன. பாரதம் வைரம் போல் இருந்தது. இறுதியில் பாரதம் சோழி போல் ஆகிவிடுகின்றது. பாரதத்தில் வைரம் வைடூரியங் களாலான மாளிகைகள் உருவாகின்றன. சோமநாத் ஆலயத்தில் எவ்வளவு செல்வங்கள் இருந்தன! பாரதவாசிகளைப் போல் செல்வம் மிகுந்தவர்களாக வேறு எந்த தர்மத்தினரும் ஆகமுடியாது. பாரதவாசிகள் மிகவும் சுகவாசிகளாக இருந்தார்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு இப்போது நினைவு வந்து விட்டது, 5000 ஆண்டுகளின் விஷயம். அதாவது கிறிஸ்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு பாரதவாசிகளாகிய நீங்கள் எவ்வளவு பெரிய செல்வந்தர்களாக இருந்தீர்கள்! இப்போது முற்றிலும் ஏழைகளாக ஆகி விட்டீர்கள். அரசாங்கம் பிரஜைகளிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டே இருக்கின்றது. இதை எல்லையற்ற தந்தை அமர்ந்து சொல்லிப் புரிய வைக்கின்றார்.

நீங்கள் ஸ்ரீஸ்ரீ சிவபாபாவின் வழிமுறைப்படி நடப்பதன் மூலம் சொர்க்கத்தின் சிரேஷ்ட தேவி- தேவதைகளாக ஆவீர்கள். இங்கே நீங்கள் வந்திருக்கிறீர்கள், மனிதரிலிலிருந்து தேவதை ஆவதற்காக. ஒரே ஓம்கார், சத்நாம், கர்த்தா புருஷ். இந்த மகிமையெல்லாம் அவர் ஒருவருக்கே! அவரை ஒருபோதும் காலன் சாப்பிடுவதில்லை அவர் தான் மனிதரிலிருந்து தேவதையாக ஆக்குகின்றார். முற்றிலும் அழுக்காக ஆகிவிட்ட ஆடையைத் துவைக்கின்றார். ஆத்மாக்களாகிய உங்களை யோகம் மற்றும் ஞனத்தின் மூலம் வெள்ளையாக ஆக்குகின்றார். உங்களுக்கு இலட்சியம் கிடைக்கின்றது- சிவபாபாவை நினைவு செய்யுங்கள், இதன் மூலம் நீங்கள் மிகவும் வெள்ளையாக ஆகிவிடுகிறீர்கள். ஆத்மா, சரீரம் இரண்டும் அழகாக ஆகிவிடும். அசலில் உங்கள் பெயர் ஷ்யாம் சுந்தர். சத்யுகத்தில் சரீரம், ஆத்மா இரண்டுமே அழகாக உள்ளன. கலியுகத்தில் ஷ்யாம் ஆகிறீர்கள். சுந்தரிலிருந்து ஷ்யாம், பிறகு ஷ்யாமிலிருந்து சுந்தர் ஆகிறீர்கள்.

நீங்கள் அறிவீர்கள், இவர் யாரோ குருவோ, சாமியாரோ அல்ல. இவரோ பரந்தாமத்தில் வசிக்கின்ற பரம பிரிய பாபா. அவர் சொல்கின்றார், எப்போது தர்மத்திற்குக் களங்கம் ஏற்படுகின்றதோ, பாரதவாசிகள் தர்மத்திலும் கர்மத்திலும் மிகக் கீழானவர்களாக ஆகின்றார்களோ அப்போது நான்

வருகின்றேன். செல்வந்தர் பிறகு பரம ஏழை இதுவும் டிராமாவின் விளையாட்டு. பாபாவை ஞானம் நிறைந்தவர் என்றும் ஞானக் கடல் என்றும் சொல்லப்படுகின்றது. எப்போது பக்தி முடிவடை கின்றதோ அப்போது ஞானக்கடல் வருவார். ஞான மையை சத்குரு தந்தார், அஞ்ஞான இருள் விலகியது. இச்சமயம் அனைவரும் கும்பகர்ணனின் அஞ்ஞான உறக்கத்தில் உறங்கிக் கொண்டுள்ளனர். ஓ காட்ஃபாதர் என்கிறார்கள், ஆனால் ஃபாதரைப் பற்றி அறிய மாட்டார்கள். பாபா வந்து புரிய வைக்கிறார் -- இப்போது தன்னை ஆத்மா என நிச்சயம் செய்யுங்கள். ஆத்மா தான் தூய்மையை இழக்கின்றது, பிறகு தூய்மையாகின்றது. சத்யுகத்தில் தூய்மையாக இருந்தீர்கள். பிறகு 84 பிறவிகள் எடுத்து தூய்மை இல்லாதவர்களாக ஆகிவிட்டிருக்கிறீர்கள். இவரும் கூட (பிரம்மா) முதலில் எதையும் அறியாதிருந்தார், இப்போது தெரிந்து கொண்டிருக்கிறார். இவருடைய அநேக ஜென்மங்களின் கடைசி ஜென்மம். அனைத்து விஷயங்களின் அனுபவஸ்தராக உள்ளார். நிச்சயமாக அனுபவஸ்தரின் உடல் தேவை தானே? குரு முதலியவர்களைக் கொண்டிருக்கிறார். கிருஷ்ணர் குரு, முனி வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. இது பூல்-பூலையாவின் (மறந்து போகின்ற) விளையாட்டு. தங்களுடைய கற்பனைகளை உட்கார்ந்து உருவாக்கியிருக் கிறார்கள். பிராமணகுல பூஷணர்களாகிய நீங்கள் உயர்ந்தவர்கள். நீங்கள் ஈஸ்வரிய குழந்தைகள். இங்கே நீங்கள் யக்ஞத்திற்கு உண்மையிலும் உண்மையான சேவை செய்கிறீர்கள். உண்மையில் நீங்கள் ஆன்மீக சமூக சேவகர்கள். அவர்கள் சரீர சம்மந்தமான சேவை செய்பவர்கள்.

ஆத்மாக்களுக்குத் தான் பாபா கற்றுத் தருகின்றார். ஆத்மா படிக்கின்றது இல்லையா? ஆத்மா கேட்கின்றது. ஆத்மா சொல்கின்றது, நான் வழக்கறிஞர் ஆகியிருக்கிறேன் இப்போது ஆத்மா சொல் கின்றது நான் மீண்டும் நரனிலிருந்து நாராயணனாக ஆகிக் கொண்டிருக்கிறேன். பாபா அவ்வாறு உருவாக்குகின்றார். அவர் எல்லையற்ற தந்தை, அனைவருக்கும் தந்தை. அவர் நமக்கு இராஜயோகம் கற்பிக்கின்றார். அவர் நிராகார். பிரம்மா, விஷ்ணு, சங்கரை பகவான் எனச் சொல்ல மாட்டார்கள். அவர்களோ தேவதைகள். பிரம்மா தேவதாய நமஹ எனச் சொல்லப்படுகின்றது. இந்த சாகார் (பிரம்மா) எப்போது சூட்சுமவதன் வாசி அவ்யக்தமாகிறாரோ அப்போது அவரை தேவதை என்பார்கள். ஆக, இவை யனைத்தும் புரிந்து கொள்ள வேண்டிய மற்றும் புரிய வைக்க வேண்டிய விஷயங்கள். நாளுக்கு நாள் மிக மிக ஆழமான விஷயங்களைச் சொல்கின்றார் என்றால் அதையும் கேட்க வேண்டும். நேரமில்லை என்று கேட்காதிருப் பார்களானால் புதிய-புதிய ஞான பாணங்கள் புத்தி ரூப அம்பறாத்துணியில் (பையில்) எவ்வாறு நிரம்பும்? யார் நல்லபடியாகப் படித்து மற்றவர்களுக்கும் கற்பிக்கிறார்களோ அவர்கள் தாம் உயர்ந்த பதவி அடைவார்கள். பாபா மம்மாவும் கூட படித்து மற்றவர்களுக்கும் கற்பித்தார்கள் இல்லையா? ஆக, யார் முட்களை மொட்டுகளாக, மற்றும் மலர் களாக ஆக்கிக் கொண்டே இருக்கிறார்களோ, அவர்கள் தான் உயர்ந்த பதவி அடைவார்கள். இதுவோ மிக சுலபமானது. இதில் பயப்படவும் தேவையில்லை. அநேகர் சொல்கின்றனர், இதுவோ மிகவும் கஷ்டமானது, நடக்க முடியாதது என்று. அட, அப்படியானால் இந்த லட்சுமி-நாராயணர் எப்படி ஆனார்கள்? யாருக்கும் தெரியாது. பாபா சொல்கிறார், நான் இவருக்குள் பிரவேசமாகியிருக்கின்றேன். இவர் 84 பிறவிகளை எடுத்திருக்கிறார். இவருக்குத் தெரியாது, நான்

சொல்கிறேன் -- நீ கிருஷ்ணபுரிக்கு மாலிக்காக இருந்தாய். இப்போது அது கடந்த காலமாக ஆகிவிட்டது. இப்போது நீங்கள் பிரம்மாண்டம், மூலவதனம், சூட்சும வதனத்தை, பிரம்மா, விஷ்ணு சங்கரை அறிவீர்கள். உங்களது புத்தியில் ஞானம் முழுவதும் உள்ளது. பிராமண வர்ணம் (குலம்) அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தது. குடுமி பிராமணர் களின் அடையாளம். பிராமணர்களுக்கும் மேலே இருப்பவர் சிவபாபா. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர். நீங்கள் இந்தச் சக்கரத்தைச் சுற்றி வருகின்றீர்கள். ஹம் ஸோ, ஸோ ஹம் -- இது உங்களை வைத்துத் தான் சொல்லப்படுகின்றது. நாம் தான் சூத்திரராக இருந்தோம், பிறகு நாம் தான் பிராமணர் ஆனோம், பிறகு நாமே தான் தேவதை ஆகப் போகின்றோம். எவ்வளவு எளிய விஷயம்! மற்றப்படி நாம் ஆத்மாவே தான் பரமாத்மா எனச் சொல்வதும், தந்தையை சர்வவியாபி என்பதும் தந்தைக்குச் செய்யப்படும் நிந்தனையாகும். இப்போது பாபா வந்திருக்கிறார். பாபா சொல்லிப் புரிய வைக்கிறார், இந்த இராவணன் அனைவரையும் விட மிகப் பழைய விரோதியாகும். இராவணன் தான் உங்களை இப்படி சோழி போல் ஆக்கியிருக்கிறான். மாயாவை வென்றால் உலகை வெல்லலாம் எனச் சொல்லப்படுகின்றது. மாயா பெரிய புயலைக் கொண்டு வருகின்றது, மிகவும் கஷ்டப்படுத்துகின்றது. இதில் பயப்படக் கூடாது. பாபா, கிருபை செய்யுங்கள் என்பதெல்லாம் கூடாது. பாபா சொல்வார், நீங்கள் படித்து உங்கள் மீது நீங்களே இரக்கம் கொள்ளுங்கள் என்னுடைய கிருபையால் நீங்கள் சிரஞ்சீவி ஆகிவிடுவீர்கள் என்பதில்லை. நீண்ட ஆயுள் உள்ளவர்களாக தேவதைகள் தான் இருக்கின்றனர். நீங்கள் இங்கே பள்ளிக்கூடத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்வீர்கள், நாங்கள் ஈஸ்வரிய கல்லூரிக்குச் செல்கின்றோம். சொர்க்கத்தைப் படைப்பவர் நிச்சயமாக தேவி-தேவதைகளைதான் உருவாக்குவார். பகவான் வாக்கு - உங்களுக்கு உங்களுடைய மற்றும் முழு சிருஷ்டியின் முதல்-இடை-கடை பற்றிய ரகசியத்தைச் சொல்லிப் புரிய வைக்கின்றேன். இந்த உலகத்தின் சக்கரத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த சுயதர்சன சக்கரத்தைச் சுற்றுவதன் மூலம் நீங்கள் சக்கர வர்த்தி ராஜா-ராணி ஆவீர்கள். தூய்மையானவர்களாக நிச்சயமாக ஆகத்தான் வேண்டும். பாபாவிடம் உறுதிமொழி கொடுக்க வேண்டும். இல்லையென்றால் காலனின் வாய்க்குள் சென்று விடுவீர்கள். பிறகு இவ்வளவு உயர்ந்த பதவி அடைய முடியாது. காமச் சிதையினால் கருப்பாக ஆக நேரிடும். ஞானச் சிதையில் அமர்வதன் மூலம் நீங்கள் வெள்ளையாக ஆகின்றீர்கள். குழந்தைகளை வெள்ளையாக மாற்றுவது இந்தத் தந்தையின் வேலையாகும். இதற்காக நிச்சயமாக சங்கமயுகத்தில் தான் வரவேண்டியுள்ளது. இது அனைத்திலும் உத்தமமான யுகம். இச்சமயம் தான் ஆத்மா பரமாத்மா சந்திப்பு என்ற திருவிழா நடைபெறுகின்றது. நிராகார் தந்தை இந்த சரீரத்தை லோனாக (கடன்) எடுத்திருக்கிறார், ஏனெனில் அவருக்குத் தம்முடைய சரீரம் என்று எதுவும் கிடையாது. இந்த ஞானக் கண்ணை அந்த ஒரு ஞானேஷ்வர் தவிர வேறு யாரும் திறக்க முடியாது. தூய்மையான ஆத்மாக்கள் யார் யார் வருகின்றார்களோ அவர்கள் பிறகு தூய்மையற்றவர்களாக ஆகிவிடுகின்றனர். சதோ. ரஜோ, தமோவிலோ அனைவரும் வந்தாக வேண்டும். இச்சமயம் அனைவரும் தூய்மை இல்லாதவர்களே, மேலும் அனைவரும் இங்கே தான் உள்ளனர். திரும்பி யாருமே செல்லவில்லை. இப்போது குழந்தைகளாகிய நீங்கள் உலகத்தின் மாலிக் (எஜமான்) ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். சிவபாபா சொல்கிறார், நானோ நிஷ்காமி (பலனை எதிர்பார்ப்பதில்லை). உங்களை உலகத்திற்கு எஜமான் ஆக்குகிறேன். எனக்கு

பலன் மீது ஆசை இல்லை. ஆக, நிஷ்காமி (சுய நலமில்லாதவராக) ஆகிறேன் இல்லையா?

பாபா புரிய வைத்திருக்கிறார் -- இங்கே தன்னை ஆத்மா என உணர்ந்து அசரீரி ஆகி அமர்ந்திருங்கள். இப்போது நாம் திரும்பிச் செல்கின்றோம். பிறகு சொர்க்கத்தில் இராஜ்யம் செய்வதற்காக வருவோம். இந்த சரீரத்தை விட்டு அசரீரி ஆகிச் செல்ல வேண்டும். சரீரம் பழையதாக ஆகிவிட்டது. இப்போது மீண்டும் நாம் வீட்டுக்குத் திரும்பிச் செல்கின்றோம். கல்ப-கல்பமாக நாம் இராஜ்யத்தை அடைகிறோம், பிறகு இழக்கிறோம். பாபாவோ சுகம்-துக்கம் கொடுப்பதில்லை. அவர் சதா சுகத்தைக் கொடுக்கும் வள்ளல். பாபா சொல்லிப் புரிய வைத்திருக்கிறார் -- இந்த வினாச ஜுவாலை இந்த ருத்ர ஞான யக்ஞத்தின் மூலம் கொழுந்து விட்டு எரிகின்றது. குழந்தைகள் சட்சாத்காரமும் பார்த்திருக் கிறார்கள். அவர்கள் பிறகு இந்தக் கண்களாலும் பார்ப்பார்கள். திவ்ய திருஷ்டி மூலம் பார்த்திருக் கிறீர்கள், பிறகு நடைமுறையில் நீங்கள் போய் சொர்க்கத்தில் அமர்ந்திருப்பீர்கள். இப்போது நீங்கள் கிருஷ்ணபுரி செல்வதற்காகப் புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள். பகவான் வருகிறார், பக்தர்களுக்கு நன்மை செய்வதற்காக, கதி சத்கதி அளிப்பதற்காக. ஆகவே நீங்கள் பகவான் மூலம் சொர்க்கத்தின் ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஞானமும் பக்தியும் இரண்டு விஷயங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்துக் காணாமல் கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்குத் தாய்-தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. படிப்பைப் படித்து தன் மீது தானே இரக்கம் கொள்ள வேண்டும். பாபாவிடம் கிருபையை வேண்டுவது கூடாது. ஸ்ரீஸ்ரீ பாபாவின் ஸ்ரீமத் படி நடந்து கொண்டே இருக்க வேண்டும்.

2. சுயதர்சன சக்கரதாரி ஆகி, மாயாவை வென்று உலகை வென்றவர்களாக ஆகவேண்டும். மாயாவிடம் பயப்படக் கூடாது. அசரீரி ஆவதற்கான அப்பியாசம் செய்ய வேண்டும்.

வரதானம் : ஒரே நேரத்தில் மனம், வார்த்தை மற்றும் கர்மத்தை ஒன்றாக சேர்த்து சேவை செய்யக் கூடிய வெற்றி நிறைந்தவர் ஆகுக.

எப்பொழுதெல்லாம் ஒரு இடத்தில் சேவையை ஆரம்பம் செய்கின்றீர்களோ, அப்பொழுது ஒரே நேரத்தில் அனைத்து விதமான சேவையும் செய்திடுங்கள். மனதில் சுபபாவனை, பேச்சில் தந்தை யுடன் சம்பந்தத்தை இணைக்கக் கூடிய சுப விருப்பம் நிறைந்த சிரேஷ்டமான வார்த்தை மற்றும் சம்பந்தம், தொடர்பில் வரும்பொழுது அன்பு மற்றும் அமைதியான சொரூபத்தினால் கவர்ச்சி செய்திடுங்கள். இவ்வாறு அனைத்து விதமான சேவையையும் இணைத்து செய்வதினால் வெற்றி நிறைந்தவர் ஆவீர்கள். சேவையினுடைய ஒவ்வொரு அடியிலும் வெற்றி அடங்கியுள்ளது - இந்த நம்பிக்கையின் ஆதாரத்தில் சேவை செய்து கொண்டே செல்லுங்கள்.

சுலோகன்: சுத்த எண்ணங்களை தன்னுடைய வாழ்க்கையின் விலைமதிப்பற்ற பொக்கிசம் ஆக்கிவிட்டீர்கள் என்றால் தனக்கும் மற்றும் பிறருக்கும் நன்மை அடங்கியிருக்கும் எண்ணங்கள் மட்டுமே எழும்.